

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்5, 58 வது வார்டு, பெரியமேடு, நேவல் மருத்துவமனை சாலையில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கினார். இந்நிகழ்வின் போது மேயர் ஆர்.பிரியா ராஜன் , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம்கவி , மாமன்ற உறுப்பினர் திருமதி. ராஜேஸ்வரி ஸ்ரீதர் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளைச் சேர்ந்த சுதாகர், விஜயகுமார் மற்றும் பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### திரு.வி.க. நகர் – எழும்பூர் தொகுதிகளில்

# 6,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை,டிச.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நேற்று (14.12.2023) திரு.வி.க. நகர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதிகளில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட 6,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகையினை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.12.2023) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டாளம், ஸ்டாரன்ஸ் சாலை, காட்டூர் தட்டான்குளம், பெரம்பூர் ஜமாலியா ஆகிய பகுதிகளில் 5,000 குடும்பங்களுக்கும், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியமேடு, நேவல் மருத்துவமனை சாலை, அப்பாராவ் கார்டன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 1,000 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 6,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், திரு.வி.க. நகர் நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழ்ச்செல்வி சசிகுமார், திருமதி சுமதி புத்தநேசன், திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுந்தர்ராஜன் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





மிக்ஜாம் புயலால் மிகுந்த பாதிப்பிற்குள்ளான மசூதி பள்ளம், திவான் பாஷ்யம் தெரு, வாணிபர் தெரு, ஜெயராம் தெரு, கவரை தெரு, இளையாழ்வார் கோயில் தெரு, சுப்பிரமணிய சாலை, தாடிரெத்தினம் தெரு, கம்பர் தெரு, பாலகிருஷ்ணா தெரு, சைதை சம்பந்தன் தெரு, நேருநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 9000 குடும்பங்களுக்கு நேற்று (14.12.2023) தலா 5 கிலோ அரிசி, பெட்சீட் மற்றும் பிஸ்கட் ஆகிய நிவாரணப் பொருட்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். உடன் மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட தி.மு.கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சைதை தொகுதியில்

# 20,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, டிச. 15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை - சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் சைதை மேற்கு மற்றும் சைதை கிழக்கு பகுதிகளைச் சார்ந்த 20,000 குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருட்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கடந்த இரண்டு நாட்களாக (13-12-2023) மற்றும் (14-12-2023) வழங்கினார்.

13-12-2023 அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள அச்சுதன் நகர், அம்பாள் நகர், காந்தி நகர், கங்கையம்மன்கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, வண்டிக்காரன் தெரு ஆகிய இடங்களில் வசிக்கும் 5000 குடும்பங்களுக்கும், உணவு இடைவேளைக்குப் பிறகு மதியம் 3.30 மணிக்கு சைதை கிழக்கு பகுதி அரசு பண்ணைக் குடியிருப்பு, ஜோதியம்மாள் நகர் ஆகிய தெருக்களில் வசிக்கும் 1400 குடும்பங்களுக்கும், வெங்கட்டாபுரத்தில் வசிக்கும் 1600 குடும்பங்களுக்கும் ஆளுக்குத் தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பிஸ்கட், தண்ணீர்பாட்டில் உள்ளிட்டவற்றை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார்.

14-12-2023 நேற்று காலை 9 மணியளவில் சைதை மேற்கு பகுதி மசூதி பள்ளத்தில்

750 குடும்பங்களுக்கும், திவான்பாஷ்யம் தெரு, வாணிபர் தெரு, ஜெயராம் தெருவில் வசிக்கும் 820 குடும்பங்களுக்கும், கவரை தெரு, இளையாழ்வார் கோயில் தெருக்களில் வசிக்கும்

670 குடும்பங்களுக்கும், சுப்பிரமணிய சாலை, தாடி ரெத்தினம் தெரு, கம்பர் தெரு, பாலகிருஷ்ணா தெரு, சைதை சம்பந்தன் தெரு ஆகிய தெருக்களில் வசிக்கும் 1760 குடும்பங்களுக்கும், மதியம்

4 மணியளவில் சைதை கிழக்கு பகுதி நேருநகரில் வசிக்கும் 5000 குடும்பங்களுக்கும் குடும்பங்களுக்கும் ஆளுக்குத் தலா 5 கிலோ அரிசி, பெட்சீட், பிஸ்கட், தண்ணீர் பாட்டில் ஆகிய நிவாரணப் பொருட்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடர்ந்து இரண்டு நாட்களாக 20,000 குடும்பங்களுக்கும் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மண்டல குழு தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், உள்ளிட்ட திமுகழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, நிகழ்ச்சி ஏற்பாடு !

# திருவொற்றியூர்: மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## ஏகா.கார்த்திகேயன், பா.பாலஉமாபதி முன்னிலை !

சென்னை டிச:15

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விடுமுறையில் பள்ளிக்கு வர முடியாமல் சிரமப்பட்ட மாணவச் செல்வங்கள் குழந்தைகளை பள்ளிக்கு வரவழைக்க அவர்களை மகிழ்வூட்டும் விதமாக

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் ஏற்பாட்டில் கன்னியா குருகுலம் அரசு பள்ளி மாணவிகளுக்கும், எம்.டி.எம் பள்ளி மாணவ மாணவியருக்கும், அங்கன்வாடி குழந்தைகளுக்கும் சத்துணவு ஊழியர்களுக்கும் இனிப்பு உவர்ப்பு சாக்லேட் பிஸ்கட்டு அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் 14(அ) வட்ட கழகச் செயலாளர் சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஏகா. கார்த்திகேயன், சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி, மாவட்ட பிரதிநிதி கே.கார்த்திகேயன், முன்னாள் பகுதி பிரதிநிதி கே.எஸ்.ஆனநதன்,

வட்டத் துணைச் செயலாளர் முத்துராஜ், ஜே.கருணாநிதி, இராம்ராஜ்,

13வது வட்டப் பகுதி பிரதிநிதி கதிரவன்,

முன்னாள் மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் டி.ராதா,

ஒய்.தங்கவேல்,

13வது வட்டக் கழக செயல்வீரர் டி.இ.பரணி குமார், கிழக்குப் பகுதி இளைஞரணி கார்த்திக், 13வது வட்டக் கழகத் தோழர்கள் நா.அணில் குமார், உத்தமன், ஒய்.எஸ்.ஆர்.ரவி, சிவக்குமார், சீனிவாசன்,

நாலாவது வட்ட இளைஞர் அணி சி.தினேஷ், அ.ஜெய்ராம், டி.சரவணன், ராஜா, ஸ்டிவு,பாலாஜி,ராஜன்,

இந்நிகழ்வில் கன்னியாகுலம் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி இந்துமதி, உதவி தலைமை ஆசிரியர் திருமதி கலா உள்ளிட்ட ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் மாணவர்களுக்கு நல உதவிகள்!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச. 15 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் தி.மு.க. இளைஞரணி செயலாளர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி ஏற்பாட்டில் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் தலைமையில் மாநகர மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் எம்.எஸ்.பி. பாரதிதாசன், சரண்ராஜ், எம்.டி. கீர்த்திவாசன், பெருமாள், சொயேப் கான், பிரேம்சேகர், ராஜேஷ், சுதர்சன், நந்தினி, திருவள்ளுவன் ஆகியோர் முன்னிலையில் சின்ன காஞ்சிபுரம் யாக சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், தேர்வு அட்டை,பென்சில் பாக்ஸ், இனிப்புகள் உள்ளிட்ட நலதிட்ட உதவிகளை மாணவரணி செயலாளரும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரும்மான சி.வி.எம்.பி.எழிலரசன் வழங்கினார்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் மாநகர மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் வி. எஸ்.இராமகிருஷ்ணன், பகுதி செயலாளர்கள் சந்துரு, திலகர், வெங்கடேசன், மண்டல குழு தலைவர் சசிகலா,மாநகர அவைத்தலைவர் கே.ஏ.செங்குட்டுவன்,பொதுக் குழு உறுப்பினர் சிகாமணி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ்,மாவட்ட விளையாட்டு மேம்பாடு அணி அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள் சங்கர், கமலக்கண்ணன், கார்த்திக், சரவணன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ராம்பிரசாத், செல்வி, நீலகண்டன்,தமிழ்ச்செல்வன், நவீன் சிவாஜி, வட்ட கழக செயலாளர்கள் தெய்வசிகாமணி, சங்கர் தனசேகர்,பகுதி கழக நிர்வாகிகள் மலர்மன்னன், கோவிந்தராஜன், செந்தில், வரதராஜன், விமல் தாஸ், வினோத்குமார், பாண்டியன் உள்ளிட்டகழகத்தினர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி ஏற்பாட்டில் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் தலைமையில் எம்.எஸ்.பி. பாரதிதாசன், சரண்ராஜ், எம்.டி.கீர்த்திவாசன், பெருமாள், சொயேப் கான், பிரேம்சேகர், ராஜேஷ், சுதர்சன், நந்தினி, திருவள்ளுவன் ஆகியோர் முன்னிலையில் சின்ன காஞ்சிபுரம் யாக சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், தேர்வு அட்டை,பென்சில் பாக்ஸ், இனிப்புகள் உள்ளிட்ட நலதிட்ட உதவிகளை சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மேயர் மகாலட்சுமி , வி.எஸ்.இராமகிருஷ்ணன், சந்துரு, திலகர், வெங்கடேசன், சசிகலா, கே.ஏ.செங்குட்டுவன், சிகாமணி, யுவராஜ், ராதாகிருஷ்ணன், சங்கர், கமலக்கண்ணன், கார்த்திக், சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு169க்குட்பட்ட பகுதியில் சிங்காரச் சென்னை 2.0 திட்ட நிதி ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட உள்ள நடைபாதைக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துணை மேயர் மு.மகேஷ் குமார் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், வட்ட செயலாளர்கள் எல்.ஆரோக்கியராஜ், மு. இராஜா, பகுதி துணை செயலாளர்கள் மு. ஆரோக்கியம், மு. பாக்கியலட்சுமி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# திருவொற்றியூரில் தளபதியார் வாசகர் வட்டம் சார்பில் தொடர் கூட்டம்!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. – தி.மு.தனியரசு எம்.சி. – வை.ம.அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை, டிச. 15-

தளபதியார் வாசகர் வட்டம் கற்றல் கற்பித்தல் என்ற நோக்கத்தோடு கடந்த 2018 ஆம் ஆண்டு முதல், சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூரில் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 6:30 மணிக்கு ஒரு சொற்பொழிவாளர் தான் படித்த நூல் பற்றி 40 நிமிடம் உரையாற்றவும், அவர் பேசியது பற்றி 20 நிமிடம் கேட்பவர்கள் கருத்து தெரிவிக்கவும் என சிந்தனைக் களமாக பயிற்சி பாசறையாக இக்கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

தளபதியார் வாசகர் வட்டத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக மாவட்டப்பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் , துணை ஒருங்கிணைப்பாளராக வட சென்னை திராவிடர் கழக இளைஞர் அணி செயலாளர் இரா.தமிழ்மாறன் ஆகியோர் செயல்பட்டு வருகிறார்கள்.

அமைப்பின் புரவலராக திருவொற்றியூர் கிழக்குப் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி. ஆசைத்தம்பி செயல்படுகிறார்.

இந்த வார நிகழ்வாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்டச்செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் மாதவரம் எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலோடு, நாளை (16.12.2023- சனிக்கிழமையும்) மாலை 6:30 மணிக்கு, 65/19,மேற்கு மாட வீதி, காலடிப்பேட்டை, சென்னை19 என்ற முகவரியில் தொடர் கூட்டங்கள் நடைபெறுகிறது.

ஒவ்வொரு வாரமும் சிறப்பு வாய்ந்த பேச்சாளர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூலாய்வுரை நிகழ்த்த உள்ளார்கள்.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர்,மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் கிழக்குப் பகுதி செயலாளர்,மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு, மேற்குப் பகுதி செயலாளர், வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன்,வட்டச் செயலாளர்கள் மற்றும் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பு செய்ய உள்ளார்கள்.

நாளை (16.12.2023 - சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, ஆர்.சி.ஆசைத்தம்பி தலைமையில் தந்தைப்பெரியாரின் "சுயமரியாதைத் திருமணம் ஏன்?" என்ற தலைப்பில் கு.தமிழ் மணி, "அண்ணா அருமை அண்ணா" என்ற நூல் பற்றி வா.கருணாநிதி , தலைவர் முதல்வர் அவர்களின் தன் வரலாற்று நூலான "உங்களில் ஒருவன்" பற்றி பி.எஸ்.சைலஸ் ஆகியோர் பேசுவார்கள்!

கவிஞர் தமிழ்மாறன் வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் மகிழன் நன்றி கூறுகிறார்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறும் தொடர் கூட்டங்களில் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.






கிண்டி, சிட்கோ தலைமை அலுவலகத்தில், நேற்று (14.12.2023) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில், மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் வங்கியாளர்கள் மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனங்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஹன்ஸ் ராஜ் வர்மா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.எஸ்.மதுமதி, தொழில் வணிக ஆணையர் எல்.நிர்மல் ராஜ், கூடுதல் தொழில் வணிக ஆணையர் திருமதி கிரேஸ் பச்சோவ், கூடுதல் தொழில் வணிக இயக்குநர்கள் சே.மருதப்பன், ஏகாம்பரம், வங்கியாளர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.